# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 14,885/1 — 1969 දෙසැම්බර් 31 වැනි බදාදා — 1969.12.31

14,885/1 ம் இலக்கம் — 1969 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது.)


# பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டி. பீ. 124/42.

### இலங்கைத் தபாற் கந்தோர் சேமிப்பு வங்கிக் கட்டளைச் சட்டம்

**அறிவித்தல்**

(191 ம் அத்தியாயமான) இலங்கைத் தபாற் கந்தோர்ச் சேமிப்பு வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம், எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, அரசாங்கக் கட்டுவேலை, தபால், தந்திப் போக்குவரத்து அமைச்சர் வால்ரர் ஜியொப்பரி மொண்ரேகு ஜயவிக்ரம ஆகிய நான் நிதி அமைச்சரின் ஒருப்பாட்டுடன் இலங்கைத் தபாற் கந்தோர்ச் சேமிப்பு வங்கியில், கட்டப்படும் வைப்புப் பணத்தின் மீது, 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் திகதி முதல் கொடுக்கப்படற்பாலதான வட்டி வீதத்தை, வருடமொன்றுக்கு ஒவ்வொரு நூறு ரூபாவுக்கும், மூன்று ரூபா அறுபது சதமாக இத்தால் நிர்ணயிக்கிறேன்.

டபிள்யூ. ஜே. மொண்ரேகு ஜயவிக்ரம,
அரசாங்கக் கட்டுவேலை, தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 28 ந் உ.

12-1506.

---

### சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

**அறிவித்தல்**

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 30 ம் பிரிவின்படி, மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிற் சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்கள், தொழில், தொழில் வசதி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டன வென்று மேற்கூறிய சட்டத்தின் 29 (3) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 1969 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ந் தேதியன்று நடைமுறைக்கு வரும்.

ஜீ. பி. தம்பையா,
நிரந்தரச் செயலாளர்,
தொழில், தொழில் வசதி அமைச்சு.

கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 30 ந் உ.

அட்டவணை

மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிற் சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு 1947 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 14 ந் தேதி வெளிவந்த 9,667 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டு, காலத்திற்குக் காலம் மாற்றப்பட்ட தீர்மானங்கள், அவ்வட்டவணையின் IV ம் பாகத்தில் " அரசாங்க விடுமுறைகள் " என்ற தலைப்பின் கீழ் 1 ம், 2 ம், 3 ம் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும் :—

**" அரசாங்க விடுமுறைகள்**

1\. (அ) (i) இப்பந்தியினதும் 2 ம், 3 ம் பந்திகளினதும் ஏற்பாடுகளுக்கமைய, வேலைக்கமர்த்துபவரொவ்வொருவரும் தம்மிடம் வேலை பார்க்கும் தொழிலாளிகள் யாவருக்கும் 1965 ம் ஆண்டின் 17 ம் இல. விடுமுறை அதிகாரச் சட்டத்தின் பொருளுக்கமைய, பின்வரும் அரசாங்க விடுமுறைகளை வேதனத்துடன் விடுமுறைகளாக அனுமதித்தல் வேண்டும் :—

(1) தேசிய வீரர் தினம்,
(2) தமிழ்த் தைப்பொங்கல் தினம்,
(3) சுதந்திர நினைவு தினம் (பெப்ருவரி 4 ந் தேதி),
(4) சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு தினத்திற்கு நேரே முந்திய தினம்,
(5) சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு தினம்,
(6) மே தினம் (மே 1 ந் தேதி),
(7) சிங்கள விசாக மாதத்தின் பூரணை தினம்,
(8) மீலா துன்நபி (நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த திருநாள்),
(9) நத்தார் தினம்.

(ii) இப் பந்தியின் (i) ம் உப பந்தியிற் குறிக்கப்பட்ட அரசாங்க விடுமுறையொன்று தொழிலாளியொருவர் வேலை நிறுத்தஞ் செய்யும் காலமொன்றில் நிகழுமாயின், அவ்வுப பந்தியின் ஏற்பாடுகள் அத்தகைய தொழிலாளிக்குப் பொருந்தா.

(ஆ) அ (i) ம் உப பந்தியிற் குறிக்கப்பட்ட அத்தகைய விடுமுறையொவ்வொன்றுக்கும் கொடுபட வேண்டிய வேதனமானது :—

(1) நிரந்தரத் தொழிலாளியொருவர் விடயத்தில், அத்தகைய விடுமுறை அனுமதிக்கப்படும் மாதத்திற்குரிய சம்பளத்திற் குட்படுத்தப்படுதல் வேண்டும். அந்நாளானது அம்மாதத்திற்குரிய சம்பளத்தைக் கணிக்கும் நோக்கத்திற்காக ஒரு சாதாரண வேலை நாளாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(2) நாட்சம்பளம் பெறும் தொழிலாளி விடயத்தில், அத்தகைய விடுமுறை நிகழும் மாதத்தில் ஒரு சாதாரண வேலை நாளுக்குரிய கீழெல்லைச் சம்பளத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

2. எனினும், வேலைக்கமர்த்துபவரொருவர், பின்வரும் நிபந்தனைகளுக்கமைய, (1) (அ) பந்தியிற் குறிக்கப்பட்ட அத்தகைய அரசாங்க விடுமுறையெதிலும் நிரந்தரமான தொழிலாளியெவருக்கும் வேலை கொடுக்கலாம் :—

(அ) அத்தகைய அரசாங்க விடுமுறையை அடுத்துப் பின்னர் வரும் டிசெம்பர் மாதத்தின் முப்பத்தோராம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஒருநாள் அத்தொழிலாளிக்கு விடுமுறையாகக் கொடுக்கப்படுதல் வேண்டும். அந்நாளானது, பதில் விடுமுறை கொடுக்கப்படும் மாதத்திற்குரிய சம்பளத்தைக் கணிக்கும் நோக்கத்திற்காக ஒரு சாதாரண வேலை நாளாகக் கருதப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) அத்தகைய நிரந்தரத் தொழிலாளிக்கு, அம்மாதத்திற்குரிய சம்பளத்துடன், அவரது வழக்கமான வேலை நேரத்திற்கப்பாற்படாத வேலைக்கு, கீழெல்லை மாதச் சம்பளத்தின் வீதத்தில் 1/25 பங்குக்குக் குறையாத வீதத்தின்படியும், அத்தொழிலாளிக்குரிய சாதாரண வேலை நாள் கொண்ட கீழெல்லை மணி நேரத்திற்கு மேற்படச் செய்யும் வேலைக்கு (கீழெல்லை மா வீதத்தை 200 ஆற் பிரிக்க வரும்) சாதாரண மணி நேர வீதத்தின் மும்மடங்குக்குக் குறையாத வீதத்தின்படியும் சம்பளம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

3. ஆயினும், வேலைக்கமர்த்துபவரொருவர் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய 1 ம் பந்தியிற் குறிக்கப்பட்ட அத்தகைய அரசாங்க விடுமுறையெதிலும் நாட் சம்பளம் பெறும் தொழிலாளியெவருக்கும் வேலை கொடுக்கலாம் :—

(அ) அத்தகைய அரசாங்க விடுமுறைக்குப் பின் அடுத்துவரும் டிசெம்பர் மாதம் முப்பத்தோராம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஒரு நாள் அத்தொழிலாளிக்கு விடுமுறையாகக் கொடுக்கப்படுதல் வேண்டும் ; அந்நாள் அப்பதில் விடுமுறை வரும் மாதத்தில் ஒரு சாதாரண வேலை நாளுக்குக் கொடுபட வேண்டிய கீழெல்லை நாளாந்தச் சம்பள வீதத்திற்குக் குறையாத வீதத்தின்படி வேதனத்துடன் கொடுக்கப்பட வேண்டும் ; அல்லது

(ஆ) அத்தகைய அரசாங்க விடுமுறையெதிலும் செய்யும் வேலைக்கு, அத்தொழிலாளிக்கு ஒரு சாதாரண வேலை நாள் கொண்ட மணி நேரத்திற் செய்யும் வேலைக்குக் கொடுபட வேண்டிய கீழெல்லை நாளாந்தச் சம்பள வீதத்தின் இரு மடங்குக்குக் குறையாமலும், (கீழெல்லை நாளாந்த வீதத்தை, அத்தொழிலாளிக்குரிய ஒரு சாதாரண வேலை நாள் கொண்ட மணி நேரத்தாற் பிரிக்க வரும்) சாதாரண மணி நேர வீதத்தின் மும்மடங்குக்குக் குறையாத வீதத்தின் படியும் அத் தொழிலாளிக்கு வேதனம் கொடுக்கப்பட வேண்டும் ."

12–1507.

குறிப்பு :—14,884/1 இலக்கங் கொண்ட அதிவிசேஷ வர்த்தமானத் தொடர்ன் இறுதி இல. 14,884/4

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.